(மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மனிதக் கடவுளான உங்களை—வாழ்நாள் முழுவதும் அந்தப் பகுதிவாழ் மக்கள் வாழ்த்துவார்கள் என்று கூறி, எங்கள் பகுதிக்கு அந்த வட்டத்தைத் தந்தமைக்காக உங்களுடைய பொற்பாத மலர்களிலே என்னுடைய வணக்கத்தைத் தலை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, தாயே!

*முற்பகல் 11-20*

## 6. விதி 110—ன்கீழ் முதலமைச்சர் அளித்த அறிவிப்புகளுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவரின் பாராட்டுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தியாவின் மொத்தத் தொழில் உற்பத்தியில் 14 சதவிகிதமும், மொத்த ஏற்றுமதியில் 30 சதவிகிதமும் துணித் தொழில் வகிக்கிறது. வேளாண்மைக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் வேலைவாய்ப்பினை உருவாக்கும் துறையாக உள்ளது.

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் 1.89 இலட்சம் நெசவாளர் குடும்பங்களுக்கும், 3.19 இலட்சம் நெசவாளர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கி முக்கியமான பொருளாதார செயல்பாடு கொண்ட தொழிலாக நெசவுத் தொழில் விளங்குகிறது.

வட்டி மானியம், கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம், ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம், கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் 1-1-1992 முதல் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இந்திய மாநிலங்களிலேயே முதன்முறையாக, முன்னோடித் திட்டமாக மாண்புமிகு அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம், இத்திட்டம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் என அம்மா அவர்களின் அரசு, நெசவாளர் நலனுக்கென திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இன்றைக்கு நெசவாளர்கள் பயனடையும் வகையில், நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் அவர்கள் பயனடையும் வகையில் அறிவிப்பைச் செய்துள்ளார்கள்.

மத்திய அரசு தராவிட்டாலும், இவ்வளவு நெருக்கடியான சூழ்நிலையில் நான், தாய் இருக்கின்றேன் என் பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்கு என்று (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு தர வேண்டியதை அம்மா அவர்களே தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலத்தில் மத்திய அரசில் அமர்ந்து இன்றைய பிழைகளையெல்லாம் களைகின்ற ஒரு மாபெரும் சக்தியாக, மாபெரும் தலைவராக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவார்கள் நிச்சயமாக. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவில் பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழகம் முன்னணியில் விளங்கி, பாரம்பரியப் பெருமை பெற்று திகழ்கிறது. பண்ணை மற்றும் பண்ணைசாராப் பிரிவுகளில் அதிக வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முனைப்புடன் ஈடுபாடு காட்டி வருகிறது.

உலகளவில் கச்சாப்பட்டு உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்த இரண்டாவது நிலையிலும், பட்டுத் துணிகளை அதிக அளவில் பயன்படுத்தும் நாடாகவும் இந்தியா திகழ்கிறது.

பட்டு உற்பத்தி செய்யும் நெசவாளர்களின் நலன் காக்க மாண்புமிகு அம்மா அவர்கள் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இன்றைக்கு பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும்வகையில், ஒரு ஏக்கருக்கு 6,750 ரூபாய் என மானியத் தொகையை உயர்த்தி வழங்கியமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய தமிழகத்தில் உள்ள நிருவாக அமைப்புகளில் வருவாய்த் துறை மிகவும் பழமையானதாகும். அரசு பொது நிருவாகத்தின் முதுகெலும்பாக மாவட்ட வருவாய்த் துறை திகழ்கிறது. சான்றிதழ்களை வழங்கி சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் பல மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதோடு, இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரண உதவி மற்றும் சீரமைப்புப் பணிகளை இத்துறை மேற்கொள்கிறது.

சமுதாயத்தில் உள்ள அடித்தளத்து மக்கள், தான் கேட்டது இங்கே கிடைக்குமா என ஏங்கித் தவிக்கும் மக்கள் துயர்தீர மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு அறிவிப்புகளைச் செய்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

'மக்கள் நலன், மக்கள் நலன் என்றே சொல்வார்கள், தம் மக்கள் நலன் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்கள்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பாடல் வரிகள் என் நினைவுக்கு வருகிறது. தம் மக்கள் என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டு ஆட்சி செய்தவர்களை வீட்டிற்கு அனுப்பி, அம்மா அவர்களை ஆட்சிக் கட்டிலிலே அமர வைத்தார்கள் தமிழ்நாட்டு மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மன்னரைத் தேடி மக்கள் வரும் நிலை மாறி, இன்றைக்கு 'மக்களைத் தேடி அரசு' என்னும் நிலைமையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் பயன்படுத்துவது கோட்டை-தண்டையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் ஆகும். மக்கள் மிகுந்த சிரமப்பட்டார்கள். "அம்மா அவர்கள் எங்களுக்கு நிறைய பொருட்களை அள்ளி, அள்ளி விலையில்லாமல் வழங்குகிறார்கள். நாங்கள் சான்றிதழ் பெறுவதில் சிரமம் உள்ளது. இந்த வட்டாட்சியர் அலுவலகத்தைப் பிரிக்கச் சொல்லுங்கள்" என்பார்கள். அந்த வகையில் 4 இலட்சம் மக்கள் தொகை உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களைப் பிரிக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல 12 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஆறாம் வகுப்பு படிக்கும்போதே அனைத்துச் சான்றிதழ்களும் வழங்க உத்தரவிட்டதற்கும், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாநிலப் பேரிடர் மேலாண்மை பயிற்சி நிலையம் அமைக்க உத்தரவிட்டதற்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-25*

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.